We Shine Academy
guiding you to get through
தினசரி நடப்பு நிகழ்வுகள்
Useful for
TNPSC,
POLICE,
BANK
Exams
ஜனவரி
25
25-01-2021
Happy New Year 2021
தினகரன்
தி இந்து
தினத்தந்தி
தினமலர்
தினமணி

தேசிய செய்திகள்

We Shine Academy
Guiding you to get through

- 11வது தேசிய வாக்காளர் தினம் ஜனவரி 25, 2021 அன்று கொண்டாடப்படுகிறது. நமது வாக்காளர்களை அதிகாரமிக்கவர்களாகவும் பாதுகாப்பு மற்றும் தகவல் அறிந்தவர்களாகவும் ஆக்குவதே இந்தாண்டு தேசிய வாக்காளர் தினத்தின் கருப்பொருள் ஆகும்.
  - டெல்லி அசோக் ஓட்டலில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், ராஷ்டிரபதி பவனில் இருந்து காணொலி காட்சி மூலம் தலைமை விருந்தினராக கலந்து கொள்கிறார். மத்திய சட்ட அமைச்சர் ரவி சங்கர் பிரசாத் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார்.

- இந்நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் 2020-21ம் ஆண்டுக்கான தேசிய விருதுகளை வழங்குவார். 'ஹலோ வாக்காளர்கள்' என்ற இந்திய தேர்தல் ஆணையத்தின் இணையதள ரேடியோவையும் தொடங்கி வைக்கிறார். இந்திய தேர்தல் ஆணையம் 1950 ஆண்டு ஜனவரி 25ல் ஏற்படுத்தப்பட்டது. இதை குறிக்கும் விதத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 25 தேசிய வாக்காளர் தினம் கொண்டாடப்படுகிறது.

- 2021ம் ஆண்டுக்கான ராஷ்ட்ரீய பால புரஸ்கார் விருது 32 சிறார்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
  - கல்வி, புத்தாக்கம், விளையாட்டு, கலை கலாச்சாரம், சமூக சேவை, வீரதீர செயல்கள் ஆகிய பிரிவுகளில் தனித்திறமைகள் கொண்ட இளம் சாதனையாளர்களுக்கு பால புரஸ்கார் விருது மத்திய அரசு வழங்கி வருகிறது. கலை - கலாச்சார பிரிவில் 7 பேருக்கும், புத்தாக்க பிரிவில் 9 பேருக்கும், கல்வி பிரிவில் 5 பேருக்கும், விளையாட்டு பிரிவில் 7 பேருக்கும், சமூக சேவை பிரிவில் ஒருவருக்கும் இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

❑ராஷ்ட்ரிய பால புரஷ்கர் விருது பெற்ற சிறார்களுடன் மோடி ஜனவரி 25 அன்று நண்பகல் 12 மணிக்கு காணொலி முறையில் கலந்துரையாடுகிறார். இந்நிகழ்ச்சியில் மத்திய மகளிர் மற்றும் குடும்ப நல மேம்பாட்டு துறை அமைச்சர் ஸ்மிருதி ராணியும் கலந்து கொள்கிறார்.

❑மின்னணு முறையில் வாக்காளர் அட்டையை பதிவிறக்கம் செய்து கொள்ளும் திட்டம் ஜனவரி 25 அன்று தொடங்கி வைக்கப்படுகிறது. மத்திய சட்டம், தகவல் தொழில்நுட்ப துறை அமைச்சர் ரவி சங்கர் பிரசாத் இத்திட்டத்தை தொடங்கி வைக்கிறார்.

➢"வோட்டர் ஹெல்ப்லைன்" எனப்படும் செல்லிடப்பேசி செயலி, தேர்தல் ஆணையத்தின் 'வோட்டர் போர்ட்டல்' இணைய தளத்திலும் இந்த டிஜிட்டல் வாக்காளர் அட்டை கிடைக்கும்.

➢1993ம் ஆண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அட்டை வழங்கப்பட்டது.

❑ஜனவரி 24ம் தேதி தேசிய பெண் குழந்தைகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது.

❑உத்திரப் பிரதேச மாநிலத்தில் போட்டித் தேர்வுகள் எழுதும் மாணவர்களுக்கு பிப்ரவரி 16ம் தேதி முதல் இலவச பயிற்சி அளிக்கவுள்ளதாக முதல்வர் யோகி ஆதித்யநாத் அறிவித்துள்ளார். சரஸ்வதியை வணங்கி கொண்டாடப்படும் வசந்த பஞ்சமி பண்டிகை தினமான பிப்ரவரி 16ம் தேதி முதல் இலவச பயிற்சி வழங்கப்படவுள்ளது.

❑சென்னை போயஸ் கார்டனில் உள்ள மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் வேதா இல்லத்தை ஜனவரி 28ம் தேதி முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி திறந்து வைக்கிறார்.

➢டிசம்பர் 5, 2016ம் ஆண்டு ஜெயலலிதா மரணம் அடைந்தார்.

❑முன்னணி நகை தயாரிப்பு நிறுவனமான ஜோஸ் ஆலுக்காஸ் நிறுவனம் பெண்களின் பெருமையை போற்றும் விதமாக **'Shine On Girl'** விளம்பரத்தை தயாரித்துள்ளது. இது சமூகத்தில் போராடும் பெண்களுக்கு ஊக்கம் தருவதாக அமைந்துள்ளது.

❑உத்திரப்பிரதேசம் மாநிலம் உதயமான நாளான ஜனவரி 24 அன்று உத்திரப்பிரதேசம் மாநிலம் முழுவதும் ஜனவரி 26 வரை 3நாள் கொண்டாட்டங்கள் நடைபெறுகிறது. இதனை உத்திரப்பிரதேச மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத் மற்றும் ஆளுநர் ஆனந்தி பெண் பட்டேல் துவங்கி வைக்கின்றனர்.

❑உத்தரகாண்ட் மாநிலத்தின் ஹரித்துவார் மாவட்டத்தில் வசிக்கும் 19 வயது மாணவி ஷிருஷ்டி கோஸ்வாமி ஜனவரி 24 அன்று ஒருநாள் முதல்வராக செயல்பட்டார். ஷிருஷ்டி கோஸ்வாமி ருர்கியில் அமைந்துள்ள கல்லூரியில் பிஎஸ்சி பயின்று வருகிறார். இவர் உத்திரகாண்ட் மாநில கோடைகால தலைநகரான கெய்சனில் இருந்து மாநிலத்தை நிர்வாகம் செய்கிறார்.

❑டெல்லியில் நடைபெறும் குடியரசு தின அணிவகுப்பில் முதல் முறையாக வங்காள தேச படைகளும் பங்கேற்க உள்ளன.

- வங்காளசேதம் விடுதலை பெற்ற 50வது ஆண்டு நிறைவையொட்டி குடியரசு தின அணிவகுப்பில் கலந்து கொள்கிறது. இந்திய குடியரசுதின அணி வகுப்பில் பங்கேற்கும் 3வது வெளிநாட்டு ராணுவம் வங்காள தேசத்தினுடையது ஆகும். பிரான்ஸ் 2016லும், ஐக்கிய அரபு அமீரகம் 2017ம் இந்த அணிவகுப்பில் பங்கேற்றுள்ளன.

தமிழக செய்திகள்

We Shine Academy
Guiding you to get through

❑பிரேசில் நாட்டுக்கு சொந்தமான அமேசானியா-1 செயற்கைகோளை விண்ணில் செலுத்த இஸ்ரோ முடிவு செய்துள்ளது. பிரேசில் தேசிய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் வடிவமைத்த அமேசானியா-1 செயற்கைக்கோள் ஆந்திரமாநிலம் ஸ்ரீஹரி ஹோட்டாவில் உள்ள ஏவுதளத்தில் இருந்து பிஎஸ்எல்விசி-51 ராக்கெட் மூலம் பிப்ரவரியில் செலுத்தப்பட உள்ளது. இந்த ராக்கெட்டில் இந்திய நிறுவனங்களான பிக்ஸல் ஸ்டார்ட்அப் மையத்தின் 'ஆனந்த்', ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியா அமைப்பின் 'சதிஷ்' பல்கலைக் கழகங்கள் கூட்டமைப்பின் 'யுனிவ்சாட்' ஆகிய 3 செயற்கைக் கோள்களும் சேர்த்து விண்ணில் செலுத்தப்பட உள்ளது.

❑ அண்ணா விருது சுரேஷ் என்பவருக்கு சென்னையில் நடைபெற விருக்கும் குடியரசு தின விழாவில் வைத்து முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி வழங்க உள்ளார்.

➢ கொடைக்கானல் ரோடு- அம்பாத்துரை இடையே தண்டவாளத்தில் கிடந்த கற்பாறைகளில் மோதாமல் வைகை விரைவு ரயிலை நிறுத்தி பயணிகளை காப்பாற்றிய மதுரை ரயில் ஓட்டுநர் சுரேஷிக்கு வீரதீர செயலுக்கான அண்ணா விருது அளிக்கப்படுகிறது.

❑விருதுநகர் மாவட்டத்தை சேர்ந்த விடத்தாகுளம் அரசுப்பள்ளி 10ம் வகுப்பு மாணவிகள் பா.தேவகி, குமரபாரதி ஆகிய இரு மாணவிகள் சமர்பித்த 'நிலையான வாழ்விற்கு சூழலியல் மற்றும் பொருளாதாரத்தில் பனையின் பங்களிப்பு' எனும் தலைப்பில் தயாரித்த அறிவியல் ஆய்வறிக்கையானது தேசிய அறிவியல் மாநாட்டிற்கு தேர்வாகி சிறப்பிடம் பெற்றுள்ளது.

❑4 சுதை சிற்பங்களுடன் கூடிய கொடி கம்ப பீடத்தை செங்கல்பட்டு மாமல்லபுரத்தில் அரசினர் சிற்பகலை கல்லூரி மாணவர்கள் 4 பேர் வடிவமைத்துள்ளனர். தமிழகத்திலேயே முதன் முதலாக ஒரு அரசு கல்லூரியில் கலைதிறனால் உருவாக்கப்பட்டுள்ள கொடி கம்ப பீடம் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்

We Shine Academy
Guiding you to get through

❑டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 5 விக்கெட்டுகளை 30 முறை வீழ்த்திய உலகிலேயே 2வது வேகப்பந்து வீச்சாளர் எனும் பெருமையை இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் ஆன்டர்ஸன் பெற்றார்.

➢ஊலகளவில் அதிகமான 5 விக்கெட்டுகளை வீழ்த்திய 6வது வீரர் எனும் பெருமையையும் பெற்றுள்ளார்.

மிக்க நன்றி

We Shine Academy
Guiding you to get through